1975 மார்ச் 22]

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், தேவிகோட்டை—பூவந்திக்கு இடையில் உள்ள ஓடையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. த. சோனையா : நம்முடைய அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிருர்கள். எந்த ஊருக்கும் எந்த ஊருக்கும் இடையே இல்லையென்று சொல்கிறார். ஏனென்ருல், கேள்வியே மாறுபட்டு வந்திருப்பதால், கேள்வியைச் சொல்லி பதிலைத் திரும்பவும் சொல்வாரா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாடபுரம் தேனி—ஏர தி சாலை. அதனுடைய நீளம் 9.2 கிலோ மீட்டர். மண் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. அவர் கேட்டிருப்பது பாலம் கட்டுவது முடியுமா என்பது. அதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என்பதனாலே, வறட்சி நிதியிலிருந்து செலவு பண்ண முடியாது. ஆகவே, பணம் வந்த பிற்பாடு செலவு செய்யப்படும்.

கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் தெரு விளக்குகள்.

*428 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவந்தராச கண்டிகை ஆகிய கிராமங்களில் இது வரை தெரு விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில் மேற்கண்ட ஊர்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது அறிக்கையில் பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவந்தராச கண்டிகை ஆகிய மதுராக்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க குருவராச கண்டிகை ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும், மேற்படி தீர்மானத்திற்கு ஏற்ப தெரு மின் விளக்குகள் அமைக்க மின் வாரியத்தை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

பொன்னம்பலசாமி மடம்.

*429 வினு—திரு. எஸ். முருகையன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலசாமி மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் சிலவற்றை விற்க அறநிலையத்துறை ஆணையாடம் அனுமதி பெறப்பட்டதா?